உடையார் எழுதிங்கள் சீரின் 2nd copy.


இதன் முதல் காப்பி 4.11.69 பாதியும் 8-11-69 பாதியும் Canadaவுக்கு அனுப்பப் பட்டது.

ஆவணி மாதம் 12ந் தேதி (28-8-69) அன்று இலப்பாளையம் உடையார் வீட்டில் நடந்த எழுதிங்கள் சீரின் விவரம்:-

---

4 உடையார்கள் குடும்பங்கள் சேர்ந்து எழுதிங்கள் செய்து கொண்டார்கள். எழுதிங்கள் சீர் அன்று உறவினர்கள் எல்லாம் வந்து சேர்ந்தார்கள். 12ந்தேதி காலையில் முதலில் பட்டக்காரரை அழைக்கும் சீர் நடைபெற்றது. அது பின்வருமாறு.

வீட்டின் முன்வாசலில் புதிதாக போடப்பட்ட பந்தலில் வண்ணான் மேக்கட்டிகள் எல்லாம் கட்டியிருந்தான். அந்த பந்தல் வாசலில் ஒரு கட்டிலைப் போட்டு அதன்மேல் வெள்ளை மாத்து ஒன்று விரித்தார்கள். பிறகு, அந்தக் கட்டிலின்மேல் பட்டக்காரர் என்பவரை கிழக்கு முகமாக உட்கார வைத்தார்கள். (பட்டக்காரர் என்பவர் பூந்துறை நாட்டைச் சேர்ந்த ஒரு உடையார்) பிறகு, ஒரு தட்டத்தில் தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு, நவதானியங்களை முடிந்து மூன்று முடிப்பு இவைகளையெல்லாம் வைத்து பட்டக்காரர் முன் வைத்தார்கள். அப்போது பெரியதனக்காரர் என்பவர் வந்து பட்டக்காரருக்கு நெற்றியில் விபூதி வைத்து, சந்தனப் பொட்டு வைத்து விட்டு தட்டத்தில் ~~உள்ள~~ இருந்த ஒரு சிகப்பு பட்டுத்துணியை எடுத்து "மீனுபட்டம். 24 நாடு நாடு 8 ஊருக்காரர்கள் சேர்ந்து போர்த்தப்பட்ட சால்வை" என்று சொல்லி சிகப்பு பட்டுத்துணியை பட்டக்காரர் மேல் போர்த்தினர். பிறகு பட்டக்காரர் என்பவர் தட்டத்திலிருந்த மூன்று நவதானிய முடிப்புகளையும் எடுத்து முன்பு எழுதிங்கள் செய்து கொண்ட மூன்று பெண்களிடம் கொடுத்தார். அவர்கள் அந்த நவதானிய முடிப்புகளை பெறும் போது பட்டக்காரரை கும்பிட்டு நவதானிய முடிப்புகளை பெற்றுக்கொண்டார்கள். (நவதானிய முடிப்பு பெற்றுக்கொண்ட மூன்று பெண்களும் கடைசிவரை சீர் செய்வார்கள். இவர்களை சீர்க்காரிகள் என்று சொல்கிறார்கள்.) பிறகு, அந்த மூன்று பெண்களும் பந்தல் வாசலில் உள்ள பந்தல் கால்களுக்கெல்லாம் சுண்ணாம்பு, செம்மண் ஆகியவைகளால் பட்டை அடித்தார்கள்.



## முகூர்த்தக்கால் போடுதல் :-

ஒரு தட்டத்தில் தேங்காய்பழம், வெற்றிலைபாக்கு, நவதானிய முளைப்பு, டம்ளரில் பால் இவைகள் எல்லாம் வைத்துக் கொண்டு வந்து பந்தல் வாசலில் ஜலமூலையால் உள்ள பந்தல்கால் அருகில் ஒரு முக்காலி போட்டு, அதன்மேல் வெள்ளை மாத்து ஒன்று விரித்து அதன்மேல் தட்டத்தை வைத்தார்கள். பெரியதனக்-காரர் முகூர்த்தக்காலை (பாச்சாமரத்தின் கிளை ஒன்று மூன்று கிளையுடன் முன்பே கொண்டு வந்து வைத்திருந்தார்கள்) எடுத்து வந்து தட்டத்தில் இருக்கும் நவதானிய முளைப்பை எடுத்து அதற்கு சாம்பிராணி தூபம் காட்டி முகூர்த்தக்காலில் கட்டினார். பிறகு, முகூர்த்தக்காலை எடுத்து பட்டக்காரர் உட்கார்ந்திருக்கும் கட்டில் அருகில் நிறுத்தி வைத்தார். அப்போது பட்டக்காரர் அந்த முகூர்த்தக்காலை எடுத்து மீண்டும் பெரியதனக்காரரிடம் கொடுத்தார். பெரியதனக்காரர் அதை வாங்கி முகூர்த்தக்கால் போடும் பந்தக்கால் அருகில் கொண்டுபோய் நிறுத்தி பிடித்துக் கொண்டார். பிறகு, பெரிய பூசாரியானவர் ஒரு இரும்பு கம்பியை எடுத்து அதன்முனையால் பந்தல்கால் அருகில் பூமியால் மூன்று குத்து குத்திவிட்டு, இரண்டு வெற்றிலை பாக்கு எடுத்து அந்த இடத்தில் வைத்தார். பிறகு, முகூர்த்தக்காலை பந்தக்கால் அருகில் நிறுத்தி பெரிய தனக்காரர், பெரியபூசாரி, சின்னப்பூசாரி மூவரும் சேர்ந்து முகூர்த்தக்காலை பிடித்துக் கொண்டு பெரியபூசாரி டம்ளரில் இருக்கும் பாலைக் கொஞ்சம் முகூர்த்தக்கால் ஊற்றினார். பின்பு தண்ணீரை ஊற்றினார். இப்படியே பால் மூன்று முறை, தண்ணீர் மூன்று முறை ஊற்றியபின் முகூர்த்தக்காலை அப்படியே பந்தக்-காலுடன் சேர்த்து மூன்றுபேரும் மூன்று கட்டுப் போட்டு கட்டினார்கள். பிறகு, சின்னப்பூசாரியானவர் தட்டத்திலிருந்த தேங்காயை உடைத்து வைத்தார். பெரியபூசாரி சொம்பில் இருக்கும் தண்ணீரை எடுத்து நீர் விளாவி, சாம்பிராணி தூபம்காட்டி பூஜை செய்தார். பிறகு, சூடம் பொருத்தி தீபாராதனை செய்து, அங்குள்ளவர்களுக்கெல்லாம் விபூதி கொடுத்தார். பிறகு,

தட்டத்தில் இருந்த தேங்காய் பழத்தை எடுத்து வீட்டுக்குள் வைத்துக் கொண்டார்கள்.


## வெற்றிலைபாக்கு வழங்குதல்:

பந்தலில் மாத்து விரித்து அதன்மேல் பெரியதனக்காரர் கிழக்கு முகமாக உட்கார்ந்தார். அவர் முன் தட்டத்தில் வெற்றிலைபாக்கு கொண்டுவந்து வைத்தார்கள். பெரிய தனக்காரர் தட்டத்தில் இருக்கும் வெற்றிலை பாக்கு கொஞ்சம் எடுத்து பட்டக்காரருக்கு கொடுத்தார். பிறகு, வந்திருந்த நாட்டுக்காரர்கள் எல்லோருக்கும் (24 நாட்டின் உள் வந்தவர்களுக்கு) வெற்றிலை பாக்கு கொடுத்தார். பிறகு, மற்றுமுள்ள உறவினர்களுக்கும், ஊர்காரர்களுக்கும், வண்ணான் நாவிதன் எல்லோருக்கும் வெற்றிலைபாக்கு கொடுத்தார்.

பிறகு, உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் சாப்பாடு போடப்பட்டது. சாப்பாட்டுவேலை முடிந்தபின்.

## எளிதீங்கள் செய்து கொள்பவர்களுக்கு தண்ணீர் வார்த்தல்:-

பந்தல் வாசலின் முன் எளிதிங்கள் செய்து கொள்ளும் 4 தம்பதிகளையும் முக்காலிமேல் வரிசையாக உட்கார வைத்தார்கள். அவர்களுடன் அவர்கள் குழந்தைகளையும் முக்காலிகள் மேல் உட்கார வைத்தார்கள். அதாவது:-




← இவ்வாறுதான் 4 தம்பதிகளையும் உட்கார வைத்திருந்தார்கள். ஒவ்வொரு தம்பதிகளின்

அருகிலும் அவர்களுடைய பெண், ஆண் குழந்தைகளை உட்கார வைத்தார்கள். பிறகு, சீர்க்காரப் பெண்கள் வந்து ஒரு வெண் கிண்ணத்தில் இருக்கும் நெய்யைத் தொட்டு எல்லோருடைய தலையிலும் கொஞ்சம் துடைத்தாள். பிறகு, அலப்புத்தாள் கொஞ்சம் எடுத்து எல்லோருடைய தலையிலும் துடைத்தாள். பிறகு, ஒரு தட்டத்தில் கொஞ்சம் சாதம்போட்டு அதில் மஞ்சள், சுண்ணாம்பு கலந்து சிகப்புசாதம் செய்து அதை எல்லோருடைய சிரசையும் சுத்திக் கொண்டுவந்து உட்கார்ந்திருந்தவரின் பின்புறம் சாதத்தை போட்டாள்.




← சாதம் சுத்திய முறை. × ← இந்தக்குறி யுள்ள இடத்தில் கடைசியில் சாதத்தை போட்ட இடம்.

சாதம் சுத்தும்போது சாதம்சுத்தும் பெண் உட்கார்ந்திருந்தவரின் பின்புறம் போய் சுத்தி வரவில்லை. சாதம்பிடித்த கையை மட்டும் நீட்டி சுத்தி வந்தாள். செஞ்சாதம் சுற்றி போட்டபின் அந்த தட்டத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி முன்பு சாதம் சுத்திய மாதிரியே தண்ணீரையும் சுத்திக் கொண்டு வந்து தண்ணீரை கீழே ஊத்திவிட்டு அந்த தட்டத்தில் கொஞ்சம் வெள்ளசாதம் போட்டு சாதத்தின் மேல் நெருப்பு ஒன்று வைத்து அந்த நெருப்பின்மேல் கொஞ்சம் நெய்யை தொட்டு வைத்து அந்த சாதத்தை உட்கார்ந்திருந்த வர்களின் முகங்களுக்கெல்லாம் வரிசையாக காட்டிவந்து அந்த சாதத்தையும் கீழேபோட்டுவிட்டு மறுபடியும் தட்டத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி தண்ணீரை எல்லோருடைய சிரசையும் சுத்திக் கொண்டு வந்து தண்ணீரை

ஊத்திவிட்டாள். பிறகு, சிக்கார பெண்களில் ஒருவள் தண்ணீரை மொந்து தட்டத்தில் ஊத்தினாள். ஒரு பெண் அந்த தண்ணீரை எளிதிங்கள் செய்து கொள்ளும் ஒவ்வொருவர் தலையிலும் வரிசையாக ஊத்தினாள். அப்போது, எளிதிங்கள் செய்து கொள்பவர்களுக்கு தண்ணி வார்ப்பது ஆண்களுக்கு அவரவர்கள் மைத்துனர்களும், பெண்களுக்கு அவரவர்களுடைய நங்கை அல்லது கொளுந்திமார்கள் முறையுள்ளவர்கள் வாத்தார்கள். இப்படி எல்லோருக்கும் தண்ணி வாத்து முடிந்தவுடன் ஆண்களுக்கு மைத்துனர்களும், பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் நங்கை கொளுந்தியும் தலையெல்லாம் துவட்டிவிட்டார்கள். பிறகு, அவர்களுக்கெல்லாம் புதிய வேஷ்டி சீலைகளும், குழந்தைகளுக்கு துணிகளும் கொடுக்கப்பட்டது. புதிய துணிகள் எல்லாம் ஒவ்வொரு தம்பதிகளின் பெண்ணின் தாய் வீட்டிலிருந்து கொடுக்கப்படுகிறது. அதாவது - எளிதிங்கள் செய்து கொள்பவர்கள் எல்லாம் குளித்துக் கொண்டு வரும்போது ஒவ்வொரு பெண்ணின் தகப்பனும் வேஷ்டி, சீலை, துணிகள் இவைகள் எல்லாம் தட்டத்தில் வைத்து பந்தல் வாசலில் உட்கார்ந்திருந்தார்கள். இவர்கள் வந்ததும் அவர்களை கும்பிட்டு புதிய வேஷ்டி சீலை, குழந்தைகளுக்கு துணி இவைகளை பெற்றுக்கொண்டார்கள். புதிய துணிகளை ஒவ்வொருவருக்கும் கொடுக்கும் போது பணம் ஒவ்வொரு ரூபாய் வைத்து கொடுத்தார்கள். எளிதிங்கள் செய்து கொள்பவர்கள் எல்லாம் புதிய துணிகளை பெற்றுக்கொண்டதும் வீட்டிக்குள் சென்று புதிய துணிகளையெல்லாம் அணிந்து அலங்காரம் செய்து கொண்டார்கள். பிறகு, எல்லோரும் வெளியில் வந்து -

கிழக்கு முகமாக நின்றார்கள். அப்போது பெரியதனக்காரர் வந்து ஒரு சோடி பூமாலையை கையில் எடுத்து சூரியனுக்கு மூன்று முறை ஏந்தி, பிறகு ஏளிதிங்கள் செய்து கொள்பவர்களுக்கு மூன்று முறை ஏந்திவிட்டு அந்த பூமாலைகளை வரிசையின் முதலில் நிற்பவர் கழுத்தில் போட்டார். மறுபடி வரிசையில் நிற்பவர்களுக்கெல்லாம் ஒவ்வொருவருக்கும் இரண்டு பூமாலைகளை எடுத்து கழுத்தில் போட்டார். முதலில் நிற்பவர் தவிர மற்றவர்களுக்கு மாலை போடும்போது சூரியனுக்கு ஏந்தவில்லை.

பிறகு, பந்தல் வாசலில் வரிசையாக முக்காலிகள் போட்டு அம்முக்காலிகளின் மேல் ஏளிதிங்கள் செய்து கொள்ளும் 4 தம்பதிகளையும் அவர்களுடைய குழந்தைகளையும் வரிசையாக கிழக்கு முகமாக உட்கார வைத்தார்கள். இவர்களுக்கு முன் வடக்கு முகமாக ஐயர் உட்கார்ந்து அவர் முன் வாழையிலை ஒன்று போட்டு அதில் பச்சரிசி போட்டு பச்சரிசி மேல் சொம்பில் தண்ணீர் வைத்து சொம்பின் மேல் இல மாந்தழைகளை வைத்து அதன்மேல் தேங்காய் ஒன்று வைத்தார். பின்பு கலசத்தை சுற்றியும் பொட்டுகள் வைத்து கலசத்தின் முன் மஞ்சள் பிள்ளையார் ஒன்று வைத்தார். பிறகு, கலசத்தின் முன் தேங்காய் உடைத்து வைத்து வெற்றிலையாக்கு பழமும் வைத்தார். பிறகு, ஐயர் மந்திரம் சொல்லிக்கொண்டு புண்ணியார்ச்சனை செய்தார். அப்போது, மஞ்சள் கலந்த அரிசியை கொஞ்சம் அள்ளி ஏளிதிங்கள் செய்து கொள்ளும் ஆண்கள் நால்வரின் கையிலும் கொஞ்சங் கொஞ்சம் கொடுத்தார். பிறகு ஐயர் மந்திரம் சொல்லிக் கொண்டே அவர்கள் கையில் கொடுத்த அரிசியை கலசத்தின் மேல் போடச் சொன்னார். பிறகு ஐயர் புண்ணியார்ச்சனை கலசத்திற்கு சாம்பிராணி தூபம் காட்டி சூடம் பொருத்தி தீபார்த்தனை செய்தார். பிறகு கலசத்தில் இருக்கும் தண்ணீரை எடுத்து மாந்தழையில் நனைத்து ஏளிதிங்கள் செய்து கொள்பவர்கள் மேல் ஐயர் தெளித்தார். பிறகு, அந்த

இடத்தில் சுற்றிலும் ~~சுற்றிலும்~~ கொஞ்சம் புண்ணியார்ச்சன தண்ணீரை வீசினார்.

### கங்கணம் கட்டி பூநூல் போடுதல்:-

பந்தல் வாசலில் ஒருதட்டத்தில் அரிசிபோட்டு வைத்திருக்கும் அந்த அரிசியை யாரோ ஒருவர் கையில் தட்டத்துடன் எடுத்து எளிதீங்கள் செய்து கொள்பவர்கள் வரிசையில் உட்கார்ந்திருப்பவர்களின் முதலில் உட்கார்ந்திருப்பவரின் முன் நீட்டினார். அப்போது எளிதீங்கள் செய்து கொள்பவர் முதலில் உட்கார்ந்திருப்பவர் தன்னுடைய இரண்டு கையாலும் அரிசியை அள்ளி பிடித்துக்-கொண்டார். அப்போது ஐயர் தட்டத்தில் இருக்கும் மஞ்சள் நூலில் விரளிமஞ்சள் முடிந்துள்ள கங்கணத்தை எடுத்து கட்டினார். பிறகு மஞ்சள் நூலில் வெற்றிலையை முடிந்து வைத்துள்ள காங்கணத்-தை எடுத்து அதே கையில் கட்டினார். இதே மாதிரி எளிதீங்கள் செய்து கொள்ளும் ஒவ்வொருவரையும் தட்டத்தில் இருக்கும் அரிசியை அள்ளி கையில் பிடிக்கச் சொல்லி அவர்களுடைய கையில் விரளிமஞ்சள் காங்கணம், வெற்றிலை காங்கணம் இப்படி ஒவ்வொருவருக்கும் இரண்டு காங்கணம் வீதம் ஐயர் கட்டினார். அதாவது: ஆண்களுக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடதுகையிலும் கட்டினார். எளிதீங்கள் செய்து கொள்ளும் தம்பதிகளின் குழந்தைகளுக்கும் மேற்கண்ட முறையில் கங்கணம் கட்டினார். பிறகு, ஐயர் தட்டத்தில் இருக்கும் பூநூலை எடுத்து எளிதீங்கள் செய்து கொள்ளும் ஒவ்வொரு ஆணிடமும் ஒன்று கொடுத்தார். அவர்கள் அதை வாங்கி கையில் பிடித்துக்-கொண்டார்கள். பிறகு, ஐயர் ஏதோ மந்திரம் சொன்னார். பிறகு, "பூநூலை போட்டுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார் ஐயர் சொன்னவுடன் எல்லோரும் பூநூலை போட்டுக் கொண்டார்கள்.

பிறகு, ஐயர் கலசத்தின் முன் அரசங்குச்சி, ஆலங்குச்சி இப்படி சில குச்சிகளைப் போட்டு நெருப்பு பற்ற வைத்து அதில் நெய் ஊற்றி ஹோமம் வளர்த்தனர். பிறகு, நெய்யை மோந்து ஊற்றிய மாந்தழையில் ஹோமகுண்டத்திலிருந்து கொஞ்சம் சாம்பல் கரியை எடுத்து அதை லேசான நெய்யுடன் கலந்து அதை, ஐயர் கைவிரலால் தொட்டு எளிதீங்கள் செய்து கொள்பவர்கள் எல்லோருக்கும் நெற்றியில் பொட்டு வைத்தார். பிறகு, எளிதீங்கள் செய்து கொண்டவர்கள் (இப்போது எளிதீங்கள் செய்து கொண்டவர்கள்) எல்லோரும் எழுந்து ஒவ்வொரு வருக ஐயரின் பாதத்தை தொட்டு கும்பிட்டார்கள். அவர்களை ஐயர் ஆசீர் வதித்தார்.

எளிதீங்கள் சீர் இத்துடன் முடிந்தது.


இந்த எளிதீங்கள் சீருக்கு ஐயருக்கு பணம் 1¼ ரூபாய், சாப்பாட்டு அரிசி உ படி அத்துடன் பருப்பு, காய்கள், புளி இவைகள் எல்லாம் உடையார்கள் கொடுத்தார்கள். அவைகளைப் பெற்றுக் கொண்டு ஐயர் வீட்டுக்குச் - சென்று விட்டார்.

எளிதீங்கள் சீரை தொடர்ந்து "சாமி செய்தல்":-


மாலை சுமார் 3 மணிக்கு சாமிகளின் சிலைகள் அடங்கிய பேழைப்பெட்டிகள், சாமிகளின் வேல், வாள், கேடயம், கரகம் இவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு உடுக்கை வாத்தியத்துடன் சின்னத்தோட்டத்து கிணற்றடிக்கு சென்றார்கள். அங்கு சென்றதும் களத்தில் வெள்ளை மாத்து விரித்து அதன் மேல் பேழைப்பெட்டிகளை வைத்துவிட்டு, பெரியதனக்காரர் பூசாரிகள் இருவர், கரகப்பூசாரி, வேல்பூசாரி, பாரிப்பு பூசாரி, மற்றும் சாமி எடுப்பவர்கள் நாலுபேர் எல்லோரும்-

கிணற்றில் குளித்துக் கொண்டுவந்து பேழைப் பெட்டியில் இருக்கிற சாமி சிலைகளையெல்லாம் எடுத்து சுத்தம் செய்தார்கள் அத்துடன் கரகம், வேல், வாள், கேடயம் இவைகளையெல்லாம் சுத்தம் செய்து சாமிகளையெல்லாம் கிழக்கு முகமாக வரிசையாக வைத்தார்கள். அத்துடன் வாள், வேல், கேடயம், கரகம், பாளைக் கரகம், தீர்த்தக் குடம் இவைகளையெல்லாம் சாமிகளின் அருகில் வைத்தார்கள். அப்போது, பாலிப்பு பூசாரி என்பவர் சாமிகளுக்கெல்லாம் துணிகள் கட்டி, பூமாலை போட்டு அலங்காரம் செய்தார். பிறகு, பெரியதனக்காரர் வந்து சாமிகளுக்கும், கரகங்களுக்கும், வேல், வாள், கேடயம் இவைகளுக்கு எல்லாம் சந்தனம், குங்குமம் இவைகளால் பொட்டுகள் வைத்தார்.

சின்னத்தோட்டம் களத்தில் சாமிகள் வைத்திருந்த முறை:-




பாளைக்கரகம் என்னும் சொம்பு  ← இப்படியிருந்தது. இந்த சொம்பு பித்தளை சொம்பு. சொம்பில் தண்ணீர் மோந்து அதில் தென்னைமரத்து பச்சை பாளையை உரித்து அதன் உள்ளே இருக்கும் தென்னம்பூவை சொருகி (சொம்பில்) விட்டார்கள். அப்போது:-




இதைத்தான் "பாளைக்கரகம்" என்று சொன்னார்கள்.

ஏழடுக்கு கரகம் என்பது:





இதைத்தான் "கரகம்" என்றும், "ஏழடுக்கு கரகம்" என்றும் சொன்னார்கள்.




இதைத்தான் தீர்த்தக் குடம் என்று சொன்னார்கள்.

சாமிகளையும் மேற்கண்ட கரகங்கள் எல்லாம் வைத்தபின் அவைகளின் முன் வெள்ளைமாத்து ஒன்று விரித்துப் போட்டார்கள். பிறகு, சின்னப்பூசாரியானவர் சாமிகளுக்கெல்லாம் தேங்காய் உடைத்துவைத்து பழம், வெற்றிலைபாக்கு இவைகளும் வைத்தார். பிறகு, பெரிய பூசாரியானவர் மணி அடித்துக்கொண்டு சாமிகளுக்கு, கலசங்களுக்கு, வேல், வாள், கேடயம் இவைகளுக்கெல்லாம் நீர் விளாவி, சாம்பிராணி தூபம் காட்டி பூஜை செய்தார். பெரியபூசாரி பூஜை செய்யும் போது சின்னப்பூசாரியானவர் சாம்பிராணியை அள்ளி நெருப்பில் போடவும், சொம்பு தண்ணீரை எடுத்து அருகில் வைக்கவும் இப்படி சில உதவிகள் செய்தார். பிறகு, தட்டத்தில் சூடம் பொருத்தி எல்லா சாமிகளுக்கும் தீபாராதனை செய்துவிட்டு அங்கிருந்த உறவினர்களுக்கும், ஊர் மக்களுக்கும் தீபாராதனை கொடுத்து விபூதி கொடுத்தார். பூஜை முடிந்ததும், புதிதாக [illegible] செய்துகொண்ட

நான்கு ஆண்களும் கணேஸ், கன்னியாத்தாள், விபீஷணன், தேவனைப்பத்தா ஆகிய நாலு சாமிகளையும் ஆளுக்கு ஒன்று எடுத்து தலையில் வைத்துக் கொண்டார்கள். பெரியதனக்காரர் பாளைக்கரகத்தை எடுத்து தலையில் வைத்துக் கொண்டார். கரகமாயப்பூசாரி என்பவர் கரகத்தை எடுத்து தலையில் வைத்துக் கொண்டார். வேல் பூசாரி வேலை எடுத்துக்-கொண்டார். பிறகு, தீர்த்தக் குடத்தை ஒருவரும், வாள், கேடயம் இவைகள் இரண்டையும் ஒருவர் எடுத்துக் கொண்டார்கள். பிறகு, மூன்று உடையார்கள் பாட்டுப்பாடிக்கொண்டு உடுக்கை அடித்துக் கொண்டு ஆட்டமாடிக்கொண்டு முன்னாலே சென்றார்கள். அவர்கள் பின் சாமிகள், கரகங்கள், வேல், வாள், கேடயம் இவைகளை ஏந்திக்கொண்டு சென்றார்கள். சின்னத் தோட்டத்திலிருந்து உடையார் வீடு செல்லும் வரை உடுக்கை வாத்தியுடன் சென்றார்கள். வழியில் சாமி வைத்திருப்பவர்களுக்கும், வேல், வாள், கேடயம் வைத்திருப்பவர்களுக்கும் சாமி வந்தது. ஆடினார்கள். வீட்டுக்கு வந்ததும் சாமிகள் வைத்திருப்பவர்கள், கரகங்கள், தீர்த்தக்குடம், வேல், வாள், கேடயம் வைத்திருப்பவர்கள் எல்லாம் வீட்டின் முன் வாசலில் வரிசையாக கிழக்கு முகமாக நின்றார்கள். அப்போது மூன்று உடையார் ஆண்கள், மூன்று பெண்கள் ஆக ஆறுபேரும் ஆறு குடங்களில் தண்ணீர் கொண்டு வந்து வரிசையாக நிற்பவர்களின் பாதங்களின் மேல் வரிசையாக தண்ணீரை ஊத்திக் கொண்டு போனார்கள். பிறகு, அவர்கள் ஆறு பேரும் குடங்களை வைத்து விட்டு வரிசையாக எல்லோருடைய பாதங்களையும் தொட்டுக் கும்பிட்டார்கள்

1  2 ← சாமிகள், கரகங்கள், வேல், வாள், கேடயம் வைத்து நிற்பவர்கள்

→ N

E

முன்பக்கம் குறிப்பிட்ட மாதிரி படத்தில் இருப்பதுபோல் நின்றார்கள். அப்போது தண்ணீர் கொண்டு வந்து ஊற்றியவர்கள் No 1ல் ஆரம்பித்து No 2 முடிய ஊற்றினார்கள். அதன் பிறகு குடங்களை வைத்து விட்டு No 1ல் ஆரம்பித்து No: 2 முடிய பாதங்களை தொட்டுக் கும்பிட்டார்கள். பிறகு,

சாமிகள், கரகங்கள், வேல், வாள், கேடயம், தீர்த்தக் குடம் இவைகளை எல்லாம் வீட்டுக்குள் சென்று வெள்ளை மாத்து விரித்து அதன்மேல் கிழக்கு முகமாக வைத்தார்கள்.


பிறகு, உறவினர்களும் மற்றுமுள்ளவர்கள் எல்லோரும் சாப்பிட்டார்கள். எல்லோருக்கும் வெற்றிலை பாக்கு கொடுத்தார்கள். பிறகு, சிறிது நேரம் செல்ல எடுத்தமன் பெரியபூசாரியும், சின்னப்பூசாரியும் சென்று குளித்துக் கொண்டு வந்து வீட்டின் பந்தல் வாசலில் ஒரு "பெஞ்ச்" போட்டு அதன் மேல் கருணை, கன்னியாத்தாள், விருமீனன், தேவானைப்பத்தா ஆகிய நான்கு சாமிகளையும் கொண்டு வந்து கிழக்கு முகமாக வைத்தார்கள். பிறகு, நாலு சாமிகளில் உள்ள துணிகளையெல்லா எடுத்து விட்டு அபிஷேகம் செய்தார்கள் (18 அபிஷேகங்கள் செய்தார்கள்) அபிஷேகத்திற்கு கொடுமுடியிலிருந்து காவேரி தீர்த்தம் இரண்டு குடங்கள் கொண்டு வைத்திருந்தார்கள். அந்த தீர்த்தத்தால் தான் அபிஷேகம் செய்தார்கள். அபிஷேகம் முறைப்படி நல்லெண்ணை, பஞ்சாமிர்தம், பால், தயிர் இவைகளால் வரிசை முறைப்படி செய்யப்பட்டது. அபிஷேகம் செய்யும் போது, பெரியபூசாரி சாமிகளுக்கு அபிஷேகம் செய்யவும் சின்னப்பூசாரி அவருக்கு உதவியும் செய்தார். அபிஷேகம் முடிந்ததும் பாரிப்பு பூசாரி வந்து சாமிகளுக்கு அலங்காரம் —

செய்தார். பெரியதனக்காரர் எல்லா சாமிகளுக்கும் பொட்டுகள் வைத்தார். பிறகு, சின்னப்பூசாரியானவர் சாமிகளுக்கெல்லாம் தேங்காய் பழங்கள் எல்லாம் உடைத்து வைத்தார். பிறகு, உள்ளே இருக்கும் கரகம், பாலைக்கரகம், தீர்த்தக்குடம், வேல், வாள், கேடயம் இவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து சாமிகளின் அருகில் வைத்-தார்கள்.

பேழை மூடிகள் சோடித்தல்.

ஐந்து பேழை மூடிகளை எடுத்து வந்து சாமிகளின் பின்புறம் வைத்தார்கள். பிறகு, பெரியதனக்காரர் வந்து அந்த பேழை மூடிகள் ஒவ்வொன்றின் உள்ளும் தேங்காய் ஒன்று, பழம் ஒரு சீப்பு, இளநீர் ஒன்று, தென்னம்பாளை ஒன்று, தாழைமடல் ஒன்று, காதோலை கருகமணி, சாமி சிலைகள் (பித்தளை சிலைகள்) ஒவ்வொரு பேழை மூடியிலும் இரண்டு சிறிய சிலைகள், முகம்பார்க்கும் கண்ணாடி ஒன்று, வெற்றிலை பாக்கு, எலுமிச்சம்பழம் ஒன்று இப்படி ஐந்து பேழை மூடிகளுக்கும் வைத்தார். பிறகு ஒவ்வொரு பேழை மூடிக்கும் ஒரு வெள்ளைவேஷ்டியைப்போட்டு மூடி பேழை மூடி தெரியாமல் மூட்டை போல் கட்டி வைத்தார். பிறகு, இப்போது எளிதீங்கள் செய்து கொண்ட நான்கு பெண்களும், இன்று எளிதீங்கள் செய்து கொண்ட ஒரு பெண்ணும் ஆக ஐந்து பேரும் குளித்துக்கொண்டு வந்து வெள்ளைச் சேலை கட்டிக் கொண்டு வந்து பேழை மூடிகள் ஐந்துக்கும் பின்புறம் நின்று கொண்டார்கள் ஒவ்வொரு பேழை மூடிக்கும் ஒவ்வொரு சொம்பு —


தண்ணீர் அருகில் வைக்கப்பட்டிருந்தது.



← ஐந்து பேழை மூடிகளும், அதன் அருகில் சொம்புகளில் தண்ணீரும்.

↖ வரிசையில் வைக்கப்பட்டுள்ள சாமிகள், கரகங்கள் இவைகள் எல்லாம்.

## அம்மை அழைத்தல்:-

மேலே குறிப்பிட்டபடி ஐந்து பெண்களும் வந்து பேழை மூடிகளுக்கு பின்புறம் நின்றவுடன் பெரியதனக்காரர் தலையில் பாளைக்கரகத்தை எடுத்து வைத்தார்கள். பெரிய பூசாரி, சின்னப்பூசாரி இருவரும் மணி, தூபக்கால், சொம்பில் தண்ணீர், தீபாராதனை தட்டம் இவைகளையெல்லாம் எடுத்துக் கொண்டு உடுக்கை வாத்தியத்துடன், மற்றும் உறவினர்களுடன் வீட்டை விட்டு கொஞ்ச தூரம் சென்று அங்கு வீதியில் ஒரு இடத்தில் வெள்ளை மாத்து ஒன்று விரித்து அதன்மேல் பாளைக்கரகத்தை இறக்கி வைத்தார்கள். பிறகு, கரகத்தின் முன்பு வீதியில் கிடக்கும் மண்ணைக் கொஞ்சம் உத்துப்போல் ( ← இப்படி) கூட்டினார்கள். அந்த மண்மேட்டின்மேல் ஒரு எருமைச் சம்பத்தை வைத்தார்கள். பிறகு, பெரிய பூசாரி பாளைக்கரகத்திற்கு நீர்விளாவி, சாம்பிராணி தூபம் காட்டி பின்பு சூடம் கொளுத்தி தீபாராதனை செய்தார். பிறகு, பெரியதனக்காரர் பாளைக்கரகத்தை —

எடுத்து முன்போலவே தலையில் வைத்துக் கொண்டார்.
பிறகு, உடுக்கை வாத்தியத்துடன் வீட்டுக்கு வந்தார்கள்.

## வேட்டைப் படைக்கலம் எடுத்தல்:-

வீட்டில் ஐந்துபேழை மூடிகளின்பக்கமும் நின்று கொண்டு இருக்கும் பெண்களில் முதலாவதாக நிற்கும் பெண்ணின் தலையில் ஒரு பேழை மூடியை எடுத்து வைத்தார்கள். சொம்பில் இருக்கும் தண்ணீரையும் எடுத்து அந்தப் பெண்ணின் வலது கையில் கொடுத்தார்கள். பிறகு, பெரியதனக்காரர் பாலைக்கரகத்தையெடுத்து தலையில் வைத்துக் கொண்டு உடுக்கை வாத்தியத்துடன் வீட்டை விட்டு கொஞ்சதூரம் சென்றார்கள். போகும்போது வேல், வாள், கேடயம் இவைகளையும் எடுத்துச் - செல்லப்பட்டது. வீட்டிலிருந்து புறப்பட்டு செல்லும்போது பெண்ணின் நடைமாத்து போட்டுக் கொண்டே போனார். குறிப்பிட்ட இடத்திற்கு சென்றதும், அந்த இடத்தில் பேழை மூடி வைத்திருக்கும் பெண்ணையும், பாலைக்கரகம் வைத்திருப்பவரையும் கிழக்கு முகமாக நிறுத்தினார்கள். பிறகு, பெரிய பூசாரி, மணிதூபக்கால் இவைகளை மற்றவர்களிடம் கொடுத்துவிட்டு தன்னுடைய இரண்டு கைகளையும் சின்னபூசாரியிடம் நீட்டுவார் (  ← இப்படி) நீட்டிய கையில் சின்னபூசாரி தன்னிடமுள்ள சொம்பிலிருந்து தண்ணீரை ஊத்தினார். பெரியபூசாரி அந்த தண்ணீரை கையில் ஏந்திப் பிடித்துக் கொண்டு பாலைக்கரகம், பேழை மூடி வைத்திருப்பவர்கள் முன்பு உடுக்கை அடித்துக்கொண்டு ஆடிக்கொண்டு இருக்கும் உடையார்களுடன் பெரிய பூசாரியும் சேர்ந்து ஆடுவார். இப்படி மூன்று சுத்து

ஆடிவந்த பின் தன்னுடைய கையிலிருக்கும் தண்ணீரை
கிழக்குத் திசையாக நோக்கி வீசிவிட்டு, கிழக்கு நோக்கி
இரண்டு கைகளையும் கூப்பி கும்பிட்டார். பிறகு, சின்னப்-
பூசாரி தன்னிடமுள்ள சந்தனத்தை சிறிது பெரிய பூசாரியின்
வலது கையின் நடுவிரலின் மேல் வைத்தார். அந்த சந்தனத்-
தை அப்படியே ஏந்திப்பிடித்துக் கொண்டு முன்போலவே
மூன்று சுத்து ஆடி வந்தார். பிறகு, தன் கையிலிருக்கும்
சந்தனத்தை கிழக்கு நோக்கி சுண்டிவிட்டு, இரண்டு
கைகளையும் கூப்பி கும்பிட்டார் பெரியபூசாரி. பிறகு,
வேல்பூசாரியிடமிருக்கும் வேலை பெரியபூசாரி வாங்கி
அதை கையில் பிடித்துக் கொண்டு முன்போலவே மூன்று
சுத்து ஆடிவந்தார். பிறகு, வேலை கொடுத்து விட்டு
தன்னுடைய வலது கையில் வாளைப்பிடித்து, இடதுகையால்
கேடயத்தை பிடித்து மூன்று சுத்து ஆடிவந்தார் பெரியபூசாரி.
பிறகு, வாளையும், கேடயத்தையும் கொடுத்துவிட்டு, பாளைக்
கரகத்திற்கும், பேழைமூடிக்கும் நீர் விழாவி பூஜை செய்து
தீபாராதனை செய்தார். அப்போது பேழைமூடி வைத்திருக்கும்
பெண்ணுக்கு சாமிவந்தது. அருகிலிருந்த பெண்கள்
இருவர் அந்தப்பெண் தாங்கலாகப் பிடித்துக் கொண்டார்கள்.
சிறிது நேரம் அப்படியே இருந்து சாமிநின்றவுடன் உடுக்கை
வாத்தியத்துடன், வண்ணை நடைமாத்துப் போட்டு வர
திரும்பி வீட்டுக்கு வந்தார்கள். வீட்டுக்கு வந்ததும்
பேழைமூடி, பாளைக்கரகம் இரண்டையும் முன்பு இருந்த
இடங்களில் வைத்துவிட்டார்கள். பிறகு, நான்கு
சாமிகளுக்கும் மற்றும் கரகங்கள், பேழைமூடிகள் —


வேல், வாள், கேடயம் இவைகளுக்கெல்லாம், பெரிய பூசாரி பூஜை செய்து தீபாரத்தனை செய்தார். தீபாரத்தனை செய்து அங்குள்ள உறவினர்களுக்கும், மற்றும் ஊர் ஜனங்-களுக்கும் விபூதி கொடுத்தார்.

## சாமிகள் பச்சைக் குழைக்கு போகுதல்:-

பூஜை முடிந்ததும் பேழை மூடிகளின் அருகில் நிற்கும் ஐந்து பெண்களின் தலையிலும் ஐந்து சும்மாடு வைத்து ஒவ்வொருவர் தலையிலும் ஒவ்வொரு பேழை மூடியை எடுத்து வைத்தார்கள். ஐந்து பெண்கள் கைகளிலும் ஐந்து சொம்பு தண்ணீரை கொடுத்தார்கள். பெரியதனக்-காரர் தலையில் பாளக்காவகத்தை எடுத்து வைத்தார்கள். புதிதாக எளிதீங்கள் செய்து கொண்ட நான்கு ஆண்களும் நான்கு சாமிகளையும் தலையில் எடுத்து வைத்துக் கொண்டார்கள் கரகமாடிப் பூசாரி கரகத்தை யெடுத்து தலையில் வைத்-துக் கொண்டார். வேல் பூசாரி வேலையெடுத்துக் கொண்-டார். வாளையும், கேடயத்தையும் ஒருவர் எடுத்துக் கொண்டார் இவர்களுக்கெல்லாம் முன் பெரிய பூசாரி கையில் சாம்பிராணி தூபக்காலுடன் மணியடித்துக் கொண்டு பூஜை செய்து கொண்டே சென்றார். பூசாரிக்கு முன் சிலர் உடுக்கை அடித்துக் கொண்டே "அண்ணமார்" பாட்டுப் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் சென்றார்கள் மற்றும் உறவினர்களும் சென்றார்கள். உடுக்கை வாத்தியத்துடன் கணேஷ் கோயிலுக்கு முன்பாக போடப்பட்டிருந்த பச்சைக் குழையை அடைந்தார்கள்.

வீட்டிலிருந்து கணேஷ் கோயிலுக்கு போகும் வழியில் சாமிகள் கொண்டு செல்பவர்களுக்கும் மற்றும் பேழைமூடிகள், காரகங்கள், வேல், வாள் கேடயம் கொண்டு செல்ப-வர்களுக்கும் சாமி வந்தது. இப்படியே அருள் முகத்துடன் கணேஷ் கோயில் போய் சேர்ந்தார்கள். வீட்டிலிருந்து, கணேஷ் கோயில் போய் சேரும் வரை நடைமாத்து போட்டு செல்லப்-பட்டது.

கணேஷ் கோயில் முன் பச்சை பந்தல் தென்னை ஓலையால் போடப்பட்டிருந்தது அது:-




வேலம்பாளையம் கணேஷ் கோயில் முன் போடப்பட்டிருந்த இரண்டு பச்சைக் குடிசைகளிலும் மேற்கண்டவாறு சாமிகளையும் பேழை மூடிகளையும் வைத்தார்கள். பிறகு, இரண்டு குடிசைகளிலும் உள்ள சாமிகளுக்கு தேங்காய் உடைத்து வைத்து, பழம் வெற்றிலைபாக்கு இவைகள் எல்லாம் வைத்து பூஜை செய்து, தீபாராதனை செய்து அங்கிருந்தவர்கள் எல்லோருக்கும் விபூதி கொடுத்தார் பெரிய பூசாரி.

சாமிகள் பச்சைக்குடிசைக்கு வந்து பூஜையாகும் போது ஆவணி 12ந்தேதி இரவு சுமார் 11 மணிக்கு மேல் இருக்கும்.


சாமிக்கு பூசை முடிந்ததும் கூனைக் கோயில் முன் உடுக்கை அடித்துக் கொண்டு "அண்ணமார்" பாட்டு பாடிக் கொண்டு ஆடினார்கள்.

## படுகளம் விழுதல்:

அப்போது ஒரு உடையார் தன்னுடைய க கைகளில் வில், அம்பு வைத்து கொண்டு ஆடினர்.




ஆலம்பாளையம் குப்பண உடையார் தன்னுடைய வலதுகையில் வாளும், இடது கையில் கேடயமும் வைத்துக் கொண்டு ஆடினர்.







மற்றும் ஒரு உடையார் தன் கையில் வேல் வைத்துக் கொண்டு ஆடினர். இப்படி இவர்கள் ஆயுதங்களை தாங்கிக் கொண்டு ஆடும் போது உடுக்கை அடிப்பவர்கள் "சின்னண்ணன், பெரியண்ணன்" பன்றிமேல் வேட்டைக்குப் போனது பற்றியும், "வேட்டுவர்"களுடன் சண்டை போட்டது பற்றியும் பாட்டுப்-பாடினார்கள். இப்படி சுமார் 2 மணிநேரம் ஆடிக் கொண்டு இருந்தார்கள். பிறகு, வில், அம்பு வைத்திருப்பவரும், வாள், கேடயம் வைத்திருப்பவரும் சண்டை போடுவது போல் பாவனை செய்தார்கள். கடைசியில், வாள் வைத்திருப்-பவர் வில், அம்பு வைத்திருப்பவரை கத்தியால் குத்துவது போல் பாவனை செய்தார். அப்போது வில், அம்பு வைத்திருந்-தவர் திடீரென்று பூமியில் விழுந்துவிட்டார். இதைத்-தான் "படுகளம் விழுவது" என்று சொல்வது. விழுந்தவர் மேற்கு தலையும், கிழக்கு காலுமாக மல்லாந்து விழுந்து விட்டார். அப்போது அவர்மேல் ஒரு வெள்ளை வேஷ்டியை -

போட்டு மூடிவிட்டார்கள். பிறகு, கருப்பண உடையாரும், உடுக்கை அடிப்பவர்களும் வீட்டுக்கு சென்று, அங்கு கருப்பண உடையார் வெண் வேஷ்டி போட்டுக் கொண்டு, ஒரு சிறிய குடத்தில் தண்ணீர் எடுத்து அதில் சில வேப்பந்தழைகளை சொருகி அதை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டு சின்னண்ணன், பெரியண்ணன் பாட்டு பாடிக் கொண்டு உடுக்கை வாத்தியத்துடன் "படுகளம்" வீழ்ந்திருக்கும் இடத்திற்கு வந்தார் கருப்பண உடையார். அங்கு வந்ததும் படுகளம் வீழ்ந்திருப்பவரை பாட்டுப்பாடி, அழுவதுபோல் பாவனை செய்து கொண்டே மூன்று சுத்து ஆடிவந்தார். பிறகு, படுகளம் வீழ்ந்திருப்பவரின் இடதுபக்கம் மண்டியிட்டு உட்கார்ந்து ஒப்பாரிப்பாடல்போல் பாட்டுப்பாடிக்கொண்டு கொஞ்ச நேரம் புலம்பினார். பிறகு, குடத்தில் இருக்கும் தண்ணீரை வேப்பிலையால் நனைத்து படுகளம் வீழ்ந்திருப்பவரின் தலைமுதல் கால் வரை தண்ணீரை தெளித்தார். இப்படி இரண்டு or மூன்று முறை தெளித்ததும் படுகளம் வீழ்ந்திருந்த ஆள் திடீரென்று எழுந்தார். அப்போது இரண்டு ஆள் அவரைப் பிடித்துக் கொண்டார்கள்.

இத்துடன் படுகளம் விழுந்து, எழுப்புதல் முடிந்தது.

## பொங்கல் & பல்லயப்பூஜை:-


சின்னப்பூசாரியானவர் ஒரு பாத்திரத்தில் பச்சரிசி ஒருபடி போட்டு கணேஷ் கோயில் அருகில் பொங்கல் வைத்தார். மற்றொருவர் பச்சைக்கடலை, பாசிப்பயிறு, கடலைப்பருப்பு இவைகளை எல்லாம் வேக வைத்து மூன்றையும் ஒன்றாக்க கலந்து சுண்டல் செய்தார்.

பிறகு, ஏழு சிறிய கற்கள் கொண்டு வந்து பச்சைக்-குடிசைக்கு எதிராக வரிசையாக நட்டார்கள். இவைகளை "ஏழு கன்னிமார்கள்" என்று சொன்னார்கள். மற்றுமொரு கல்லை கொஞ்சதூரம் தள்ளி நட்டார்கள். இதை "கருப்பணசாமி" என்று சொன்னார்கள். சின்னப்பூசாரி அவைகளுக்-கெல்லாம் தண்ணீர் ஊற்றி, சந்தனம், குங்குமம் இவைகளால் பொட்டுகள் வைத்தார். தேங்காய் உடைத்து பழம், வெற்றிலை பாக்கும் வைத்தார். பிறகு, பச்சைக்-குடிசையின் உள்ளே இருக்கும் நான்கு சாமிகளுக்-கும் நாலுபடப்பு பொங்கல் சாதம், நாலுபடப்பு சுண்டலும் படைத்தார்கள். பிறகு, பச்சைக்குடிசைக்கு எதிரில் நடப்பட்ட கன்னியாத்தாள், கருப்பணசாமிக்கும் ஒவ்வொரு படப்பு பொங்கல் சாதமும், ஒவ்வொருபடப்பு சுண்டலும் படைத்தார்கள். பொங்கல் சாதம், சுண்டல் எல்லாம் சாமிகளுக்கு படைத்த பின்

## வாக்குப் பிரிப்பது:-

கணேஷ் கோயிலின் முன்பாக பெரியபூசாரியை வடக்குமுகமாக நிறுத்தினார்கள். பெரியதனக்காரர் வந்து ஒரு சீட்டித்துணியை (சாமிதுணி) எடுத்து பெரிய பூசாரி தலைமேல் போட்டு (முக்காடு) போர்த்தினார். பிறகு, கிலுகிலுப்பையை எடுத்து பூசாரியின் வலது கையில் கொடுத்தார். "கிலுகிலுப்பை" என்பது இரும்பு தகட்டால் செய்த ஒரு குண்டு. அதன் உள்ளே சில சிறிய கற்கள். அந்த குண்டை சுற்றிலும் சிறிய ஓட்டைகள் (துவாரம்) இருந்தது. அந்த இரும்பு குண்டின் துவாரங்களில் ஒரு துவாரத்தில் —

ஒரு இச்சிலையை சொருகி அதை பெரிய பூசாரியின் வலது
கையில் கொடுத்தார்கள். இதைத்தான் "~~[struck out]~~ -
கிலுகிலுப்பை என்று சொன்னார்கள். அது:-  இப்படியிருந்தது. பிறகு, ஒருமிச்சம் -
பிடும் ஒன்றை பூசாரியின் இடதுகையில் கொடுத்தார்கள். பிறகு,
பெரியதனக்காரர் பாளைக்கரகத்தை எடுத்து பெரிய பூசாரியின்
தலையில் வைத்து பிடித்துக் கொண்டார். பெரிய பூசாரியை
இப்படி நிறுத்தியதும் அவர் முன் வெள்ளைமாத்து விரித்தார்கள்
அந்த வெள்ளைமாத்துமேல் 4 ஜோடாக எளிதீங்கள் செய்து கொண்ட
நாலு தம்பதிகளும், அவர்களுடைய குழந்தைகளும் இப்புர
விழுந்து படுத்துக் கொண்டார்கள். அது:-




பிறகு பூசாரிக்கு அருள்வந்து முன்னும் பின்னும் ஒவைந்து
கொண்டே தன் வலதுகையில் இருக்கும் கிலுகிலுப்பையை
ஆட்டிக் கொண்டே கன்னியாத்தாள்மேல் விருத்தங்கள்
சொன்னார். இப்படி அமார் ¼ மணிநேரம் விருத்தங்கள் சொன்ன
பிறகு கடைசியாக "மடியில் அரிசிகட்டி மங்காமை நாவளத்தரை,
சிரகில் அரிசிகட்டி சிந்தாமை வளத்தரை ஏந்திரீங்க" என்று
பெரிய பூசாரி சொன்னார். அப்படி சொன்னவுடன் இப்புர
படுத்திருந்தவர்கள் எல்லோரும் எழுந்து கொண்டார்கள்.
பிறகு, எளிதீங்கள் செய்து கொண்டவர்களில் ஒரு ஆணும்
அவருடைய மாமன் மைத்துனர்களில் யாரோ ஒருவரும் ஆக
இருவரும் பெரிய பூசாரி முன் இப்புர விழுந்து படுத்துக் -
கொண்டார்கள். அப்போதும் பெரியபூசாரி சில விருத்தங்கள்
சொல்லி பிறகு "மடியில் அரிசிகட்டி மயங்காமை நாவளத்தரை
சிரகில் அரிசிகட்டி சிந்தாமை நாவளத்தரை ஏந்திரீங்க என்று-

சொன்னார். சொன்னவுடன் படுத்திருந்தவர்கள் இருவரும் எழுந்து கொண்டார்கள். பிறகு, பெரியதனக்காரர் பூசாரியின் தலையிலிருந்த பரிகலக்கரகத்தை எடுத்து திண்ணைக்கில் வைத்துவிட்டு, கையிலிருந்த கிலுகிலுப்பையையும், எலுமிச்சம் பழத்தையும் வாங்கிக்-கொண்டார். அதன்பிறகு, பெரிய பூசாரி பூஜை செய்ய ஆரம்பித்தார். அப்போது முறைப்படி கணேஷ், கன்னியாத்தாள், விருமீனன், தேவானைப்பத்ரா இவைகளுக்கெல்லாம் வரிசையாக பூஜை செய்துவிட்டு பின்பு வெளியில் நட்டுவைத்த ஏழு சாமிகளுக்கும், கருப்பண சாமிக்கும் பூஜை செய்தார். பிறகு, திட்டத்தில் சூடம் பொருத்தி எல்லா சாமிகளுக்கும் தீபாரத்தனை செய்தார். பிறகு, அங்கு நின்ற தலைப்பாளையம் கவுண்டர் மக்களுக்கெல்லாம் முதலில் விபூதி கொடுத்தார். பிறகு, அங்கு நின்ற மக்களுக்கெல்லாம் விபூதி கொடுத்தார்.

பிறகு, சாமியெடுப்பவர்கள் நான்குபேரும் சாமிகளையெடுத்து தலையில் வைத்துக் கொண்டார்கள். பெரியதனக்காரர் பரிலக்-கரகத்தை எடுத்து தலையில் வைத்துக் கொண்டார். கரகமாடிப்-பூசாரி கரகத்தை எடுத்துக்கொண்டார். வேல்பூசாரி வேலையெடுத்துக்கொண்டார். இப்போது பேழை மூடிகள் ஐந்தையும் ஐந்து ஆண்கள் எடுத்துக் கொண்டார்கள். வாள் கேடயம் இவைகளை ஒருவர் எடுத்துக் கொண்டார். தீர்த்தக் குடத்தை ஒருவர் எடுத்துக் கொண்டார். உடுக்கை அடிப்பவர்கள் உடுக்கை அடித்துக் கொண்டு பாட்டுப்பாடி ஆடிக் கொண்டு முன் வர சாமிகள் வைத்திருப்பவர்கள் பின்னில் வந்தார்கள். (சாமி பச்சைக்குடிசையிலிருந்து வீட்டுக்கு புறப்படும்போது 29.8.69 வெள்ளி காலை சுமார் 6-30 மணி இருக்கும்)

கணேஷ் கோயிலிலிருந்து புறப்பட்டு வீட்டுக்கு போகும் வழியில் சாமிவைத்திருந்த ஒருவருக்கு சாமி வந்தது. அப்படியே வீட்டுக்கு வந்ததும் House 31 உடையார் வீட்டின் முன் சாமி வைத்திருப்பவர்களும் மற்றும் கரகங்கள், வாள், வேல், கேடயம், பேழை மூடிகள் வைத்திருப்பவர்களும் வரிசையாக நின்றார்கள். அப்போது ஒரு பெண் ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்து வரிசையாக எல்லோருடைய கால் பாதங்க-ளுக்கும் ஊற்றிவிட்டு பிறகு எல்லோருடைய பாதங்-களையும் தொட்டுக் கும்பிட்டாள். பிறகு, சாமிகள், பேழை மூடிகள், பாளைக்கரகம், வாள், கேடயம், வேல் இவைகளையெல்லாம் கொண்டுபோய் வீட்டுக்குள் வைத்து விட்டார்கள். கரகமாடி கரகத்தை தலையில் வைத்து வீதியில் நின்றிருந்தார். அப்போது அவர் முன் மாத்து விரித்தார்கள். அந்த மாத்தின்மேல் கரகமாடிப்பூசாரி மண்டியிட்டு ஆடிக்-கொண்டே வீட்டின் முன் கதவில் உள்ளே நுழைந்தார். அப்போது கதவின் உள்புறம் பெரிய பூசாரி தட்டத்தில் சூடம் பொருத்தி கரகத்திற்கு தீபார்த்தனை செய்தார். பிறகு, கரகமாடிப்பூசாரி எழுந்து கரகத்தைக் கொண்டுபோய் சாமிகள் இருக்கும் இடத்தில் வீட்டுக்குள் வைத்துவிட்டார். பிறகு, பெரிய பூசாரி தட்டத்தில் சூடம் பொருத்தி எல்லா சாமிக-ளுக்கும் தீபார்த்தனை செய்து அங்குள்ளவர்களுக்கெல்லாம் விபூதி கொடுத்தார்.

## பூசாரி வரிசை:

House no: 45 வாசலில் மாத்து விரித்து அந்த மாத்தின்மேல் பெரியபூசாரி, சின்னபூசாரி இருவரையும் கிழக்கு முகமாக-

உட்கார வைத்தார்கள். பந்துக்களும் உட்கார்ந்தார்கள். அப்போது பெரியதனக்காரர் ஒருதட்டத்தில் தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு, விபூதி, சந்தனம், பூ, புதிய வேஷ்டிகள் மூன்று, துண்டுகள் இரண்டு இவைகளையெல்லாம் வைத்து கொண்டு வந்து பூசாரிகள் முன் வைத்தார். அப்போது பூசாரிகளுக்கு மாமன் மைத்துனர் முறை உள்ள ஒரு ஆள் எழுந்து தலையில் உருமால கட்டிக் கொண்டு வந்து பூசாரிகள் முன் நின்று கூட்டத்தினரை நோக்கி "பூசாரி வரிசை செய்யலாமா?" என்று கேட்டார். அப்போது கூட்டத்தினர்கள் எல்லாம் "செய்யலாம்" என்று பதில் கொடுத்தார்கள். செய்யலாம் என்ற பதில் கிடைத்தவுடன் பூசாரிகளுக்கு மாமன் மைத்துனர் முறையானவர் பூசாரிகள் இருவருக்கும் நெற்றியில் விபூதி வைத்து சந்தனப் பொட்டு, குங்குமம் எல்லாம் வைத்தார். பிறகு, அங்குள்ள உறவினர்கள் எல்லோருக்-கும் விபூதிவைத்து பொட்டு வைத்தார். பிறகு, தட்டத்தில் இருக்கும் பூவை கொஞ்சம் எடுத்து பெரிய பூசாரியின் தலை உருமாலையில் கொஞ்சம் சின்ன பூசாரியின் தலை உருமாலையில் கொஞ்சம் சொருகினர். பிறகு, ஒரு தட்டத்தை யெடுத்து அதில் முன்பு ஒரு தட்டத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்ட வேஷ்டிகளில் இரண்டு துண்டு ஒன்று இவைகளை யெடுத்து வைத்து, அத்துடன் இரண்டு தேங்காய், இரண்டு சீப்பு பழம், வெற்றிலைபாக்கு, பணம் ஒரு ரூபாய் இவைகள் எல்லாம் வைத்து, ~~அ~~ தட்டத்துடன் எடுத்து பெரிய பூசாரியிடம் கொடுத்து விட்டு இரண்டு கைகளையும் கூப்பி பெரிய பூசாரியை கும்பிட்டார். பதிலுக்கு பெரிய பூசாரியும்

கும்பிட்டார். பிறகு, மற்றொரு தட்டத்தில் இருக்கும் ஒரு வேஷ்டி, ஒரு துண்டு, பழம் ஒரு சீப்பு, தேங்காய் ஒன்று, வெற்றிலை பாக்கு, பணம் ஒரு ரூபாய் இவைகளை அப்படியே தட்டத்துடன் எடுத்து சின்னபூசாரியிடம் கொடுத்துவிட்டு, கும்பிட்டார். பதிலுக்கு சின்னபூசாரியும் கும்பிட்டார். பிறகு, எல்லோரும் எழுந்து கொண்டார்கள்.

## அணிகளப் பூசை :-

சின்னப் பூசாரியானவர் வீட்டின் உள்ளே இருக்கும் சாமிகளுக்கெல்லாம் தேங்காய்பழம் உடைத்து வைத்தார். பிறகு, பெரிய பூசாரியானவர் எல்லா சாமிகளுக்கும் நீர்விளாவி சாம்பிராணித் தூபம் காட்டி தீபாராதனை செய்தார். பிறகு, அங்குள்ளவர்கள் எல்லோருக்கும் விபூதி கொடுத்தார்.

## பிரசாதம் வழங்குதல் :-

வீட்டின் உள்ளே பட்டக்காரர், பெரியதனக்காரர், பாரிப்பு பூசாரி (சோமாசி) கரகமாடிப்பூசாரி, வேல்பூசாரி இவர்களையெல்லாம் வரிசையாக உட்கார வைத்தார்கள். பெரியபூசாரியும், சின்னப்பூசாரியும் அவர்களுக்கெல்லாம் தேங்காய் பழம் பிரசாதம் கொடுத்தார்கள். அதாவது, முதலில் பட்டக்காரருக்கும், 2வது பெரியதனக்காரருக்கும், 3வது கரகமாடிப்பூசாரிக்கும், 4வது பாரிப்பு பூசாரிக்கும், 5வது வேல்பூசாரிக்கும் இப்படி வரிசையாக பிரசாதம் கொடுத்தார்கள். ஒவ்வொருவருக்கும் உடைத்த தேங்காய் கொஞ்சம் அத்துடன் ஒவ்வொரு பழமும் —

வைத்து கொடுத்தார்கள். பிறகு, அங்கிள்ளவர்கள் எல்லோருக்கும் கொஞ்சம் தேங்காயும் அத்துடன் கொஞ்சம் பழமும் (ஒரு துண்டு பழம்) பிரசாதம் கொடுத்தார்கள். பிறகு, உறவினர்களுக்கெல்லாம் சாப்பாடு போட்டார்கள். உறவினர்கள் சாப்பிட்டதும் தாம்பூலம் போட்டுக் கொண்டு விடை பெற்றுக் கொண்டு அவரவர்கள் ஊருக்கு புறப்பட்டார்கள்.

இத்துடன் உடையார் செட்டிகள் சீரும், சாமி செய்யும் சீரும் முடிந்தது.

(A)

குறிப்பு:-

① எளிதீங்கள் செய்து கொண்டவர்களுக்கெல்லாம் கட்டிய கங்கணங்களை பச்சைக்கிடைசையாலிருந்து திரும்பி வந்ததும் (29.8.69) காலையில் கங்கணங்களை அவரவர்களே அவிழ்த்து விட்டதாக சொன்னார்கள்.

② 28.8.69 அன்று கிணற்றுக்குப்போனதும் பெரியபூசாரி, சின்னப்பூசாரி, பெரியதனக்காரர், கரகமாடிப்பூசாரி, பாலிப்பு பூசாரி, வேல்பூசாரி ஆகியவர்களுக்கெல்லாம் நாவிதன் சவரம் செய்தான். பிறகு, அவர்கள் எல்லாம் குளித்துக்கொண்டு வந்து நெற்றியல் விபூதி வைத்துக் கொண்டார்கள். பிறகு, பெரிய பூசாரியும், சின்னப்பூசாரியும் தட்டத்தில் இருந்த விரளிமஞ்சள் கங்கணத்தை எடுத்து சாம்பிராணித் தூபம் காட்டி இருவரும் வலதுகையில் கட்டிக் கொண்டார்கள். பிறகு, தட்டத்தில் இருந்த பூநூல் இரண்டை எடுத்து இருவரும் போட்டுக் கொண்டார்கள். மற்ற நால்வரும் புதிய பூநூல் போட்டுக் கொண்டார்கள். இவர்கள் நால்வரும் கங்கணம் கட்டிக்கொள்ளவில்லை.

③ "பூசாரி வரிசை" நடப்பதற்கு முன் பூசாரிகள் இருவரும் கங்கணங்களை அவிழ்த்துவிட்டார்கள். கங்கணம் அவிழ்க்கும்போது சீர் ஒன்றும் இல்லை.

④ எளிதீங்களுக்கு ஆன செலவுகளை எளிதீங்கள் செய்துகொண்ட நான்கு குடும்பங்களும் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள்:-

1. சின்னம்மன் கோயில் பாளையம் வையாபுரி உடையார் தம்பதிகள்
2. கோபிதாலுகா கள்ளிப்பட்டி தெண்டபாணி உடையார் தம்பதிகள்
3. ஜெலப்பாளையம் பெரியண உடையார் மகன் ராமசாமி உடையார் தம்பதிகள்.
4. சேலம் Dt- சங்ககிரி பெரியண உடையார் தம்பதிகள்.

(B)

(5) சாமிகளுக்கு தீபார்த்தனை செய்து உறவினர்களுக்கு தீபார்த்தனை கொடுக்கும் போது அவர்கள் காசு (காணிக்கை) போடுவார்கள். அந்தக் காசுகள் மொத்தத்தில் பெரிய பூசாரிக்கு இரண்டு பங்கும், சின்னப்பூசாரிக்கு ஒருபங்கும் பங்கு வைத்துக் கொள்வார்கள்.

(6). உடையார்களில் "நாட்டுப் பெரிதனக்காரர்", "கோயிலூட்டுப்-பெரிதனக்காரர்" என்று இரண்டுபேர் உள்ளனர். இவர்களில் கிணற்றிலிருந்து பாளைக்கரகம் கொண்டு வந்ததும் பிறகு, அம்மை அழைத்தல், வேட்டைப் படைக்கலம் இவைகளுக்கு பாளைக்கரகம் எடுத்துச் சென்றதும் நாட்டுப் பெரிதனக்காரர். பிறகு, சாமிகள் விநாயகர் கோயிலுக்கு போகும் போதும், அங்கு பூசாரி தலையில் பாளைக்கரகம் வைத்து பிடித்ததும், பிறகு, வீட்டுக்கு வரும் போது பாளைக்கரகம் கொண்டு வந்ததும் கோயிலூட்டு பெரிதனக்காரர் ஆவர்.

---